இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

ஊனியல்புக்கு ஏற்ப வாழ்வோர் கடவுளுக்கு உகந்தவர்களாய் இருக்க முடியாது. ஆனால் கடவுளின் ஆவி உங்களுக்குள் குடிகொண்டிருந்தால், நீங்கள் ஊனியல்பைக் கொண்டிராமல், ஆவிக்குரிய இயல்பைக் கொண்டிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிராதோர் அவருக்கு உரியோர் அல்ல. பாவத்தின் விளைவாக உங்கள் உடல் செத்ததாயினும், கிறிஸ்து உங்களுள் இருந்தால், நீங்கள் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுவீர்கள்; அதன் பயனாகத் தூய ஆவி உங்களுக்குள் உயிராய் இருக்கும் (உரோ 8:8-10)

# திருத்தந்தை பிரான்சிஸ் 266-வது திருத்தந்தையாக 10-ம் ஆண்டு நிறைவு



## சிறப்பு கண்ணோட்டம்

மன உறுதி, இரக்கம் மற்றும் அமைதியின் பாதைகளில் தன் தலைமைத்துவப் பணியை சிறப்பாக மேற்கொள்ளும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடந்த மார்ச் 13 திங்கள்கிழமையுடன் திருத்தந்தையாகத்



*2013–ல் திருத்தந்தையாகத் தேர்வுப்பெற்ற போது*

தேர்ந்தெடுக்கபட்டதன் பத்தாண்டுகளை மகிழ்வுடன் நிறைவு செய்கின்றார். 1936ம் ஆண்டு டிசம்பர் 17ம் தேதி, அர்ஜென்டீனா நாட்டின் புவனோஸ் அய்ரெஸ் நகரில் பிறந்தவராவார். Jorge Mario Bergoglio என்பது இவரது பெயர். புவனோஸ் அய்ரெஸ் பேராயராகப் பணியாற்றிய கர்தினால் அவர்கள், 2013ம் ஆண்டு திருஅவையின் 266வது திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திருத்தந்தை பிரான்சிஸ் என்ற பெயரையும் ஏற்றார்.

2013ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11ம் தேதி, உடல்நிலைக் காரணமாக திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்கள் பதவி விலகியதைத் தொடர்ந்து, வத்திக்கானின் சிஸ்டைன் சிற்றாலயத்தில் கூடிய கர்தினால்கள், கர்தினால் Jorge Mario Bergoglio அவர்களை, அடுத்த திருத்தந்தையாகத் தேர்ந்தெடுத்தபோது, பல்வேறு ஆச்சரியங்கள் அங்குப் பொதிந்திருந்தன. இயேசு சபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வரும், அமெரிக்கக் கண்டத்திலிருந்து வரும் முதல் திருத்தந்தையும் இவரே என்பது ஆச்சர்யத்திற்கான காரணங்களுள் ஒன்று.


அனைத்து சகோதரர், சகோதரிகளுக்கு, குறிப்பாக, ஏழைகள், சமுதாயத்தின் விளிம்புநிலையில் வாழ்வோர், புலம்பெயர்ந்தோர், வீடற்றோர், மற்றும், நோயாளிகளுக்கு பரிவன்பைக் காட்டுபவர் திருத்தந்தை பிரான்சிஸ். இப்பண்பை வெளிப்படையாகவும் தவறாமலும் செயல்படுத்தி வருபவர். திருஅவையில் திறந்தமனதுடன் கலந்துரையாடல் மற்றும், விவாதங்கள் நடைபெறவும் ஊக்கப்படுத்துபவர், அருள்பணித்துவ கலாச்சாரத்தில் மாற்றத்தைக் கொணர முயற்சி, புதிய விழுமியங்களோடு புதிய உலகை அமைக்க முயற்சி, நம் பொதுவான இல்லமாகிய இப்பூமியைப் பராமரிக்க நடவடிக்கை, கிறிஸ்தவ ஒன்றிப்பு, பல்சமய உரையாடல், மனிதகுல உடன்பிறந்தநிலையை ஊக்குவிக்க நடவடிக்கை, இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கக் கோட்பாடுகளை நடை முறைப்படுத்த முயற்சி உட்பட பல்வேறு துறைகளில் திருத்தந்தை பிரான்சிஸ் ஈடுபட்டு வருகின்றார். திருஅவையின் வரலாற்றில் முதன் முறையாக, தனக்கு ஆலோசனை வழங்க, ஒன்பது பேர் கொண்ட கர்தினால்கள் அவையை உருவாக்கியவரும் இவரே.

### மாமன்றங்கள்

குடும்பம், இளையோர் பற்றிய உலக ஆயர்கள் மாமன்றங்கள் உட்பட, அகில உலக ஆயர்கள் மாமன்றங்களையும், திருஅவையில் சிறியோர் பாதுகாப்பு என்ற தலைப்பில் ஒரு மாமன்றத்தையும் அமேசான் பகுதிக்கென ஆயர்கள் மாமன்றத் தயாரிப்பையும் திருத்தந்தை நடத்தியுள்ளார். திருஅவை வாழ்வின் மையத்தில் எல்லாரும் ஒன்றிணைந்து வருவதன் முக்கியத்துவம், திருத்தந்தையின் தலைமைப் பணியில் தெளிவாகத் தெரிகின்றது.

கடந்த பத்து ஆண்டுகளில் உலகின் 60 க்கும் மேற்பட்ட நாடுகளில், 42 திருத்தூதுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார், இன்றுவரை, திருத்தந்தை பிரான்சிஸ் 430 பொதுபார்வையாளர்கள் சந்திப்பு, 21 தலைப்புக்களில் மறைக்கல்விகள் மற்றும் 8 முறையாக 111 கர்தினால்களை நியமனம் செய்து புதிதாக அறிவித்துள்ளார். 911 பேரை புனிதர்களாக அறிவித்தும், ஏராளமான "சிறப்பு ஆண்டுகளையும் அறிவித்துள்ளார். 2016 ஆம் ஆண்டு இரக்கத்தின் ஆண்டு, 2020புனித யோசேப்பு ஆண்டு, 2021 ஆம் ஆண்டு குடும்ப ஆண்டு போன்றவற்றையும், 550க்கும் மேற்பட்ட மூவேளை செப உரை மற்றும் பாஸ்கா மூவேளை செப உரை அறிவிப்புகளையும் வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள், தன் தலைமைப் பொறுப்பின் இறுதி நாட்களில் எழுதத் துவங்கிய Lumen Fidei என்ற திருமடலை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நிறைவு செய்து, 2013ம் ஆண்டு ஜூன் மாதம் வெளியிட்டார். அதைத் தொடர்ந்து, 'Laudato si' அதாவது, "இறைவா உமக்கே புகழ் - நம் பொதுவான இல்லமான பூமியைப் பேணுதல்" என்ற தலைப்பில், இயற்கை, சுற்றுச்சூழல் ஆகிய கருத்துக்களை மையப்படுத்தி, தன் இரண்டாம் திருமடலை 2015ம் ஆண்டு வெளியிட்டார். இன்னும் தன் எண்ணங்களை வெளிப்படுத்தவும், Evangelii gaudium, Amoris laetitia, மற்றும்




*'Laudato si' 2015*

Gaudete et exsultate என்ற மூன்று திருத்தூது அறிவுரை மடல்களையும் வெளியிட்டுள்ளார்.

இதுவரை ஐந்து சினோடல் என்னும் ஒருங்கிணைந்த பயணக் கூட்டங்களை நடத்தியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் குடும்பங்களுக்காக, இரண்டு, 2018 ஆண்டில் இளைஞர்களுக்காக ஒன்று, 2019 ஆம் ஆண்டில் Pan-Amazon பகுதிக்கு ஒரு சிறப்பான சினோடலையும் வழிநடத்தியுள்ளார். இறுதியாக 2023 ஆண்டிற்கான ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஆயர்கள் மாமன்றத்தையும் வழிநடத்த உள்ளார். 2025 ஆண்டிற்கான ஜூபிலி ஆண்டானது ஏற்கனவே அறிவிக்கப் பட்டபடி, நம்பிக்கையின் திருப்பயணிகள்" என்ற கருப்பொருளில் கொண்டாடப்பட உள்ளது.

**நிறைவாக,** ஏழைகளுக்கான ஒரு ஏழை திருஅவை என்ற கண்ணோட்டத்தில், ஏழைகள் மற்றும் முதியோர்களுக்கு அதிக கவனம் செலுத்துகின்றார் திருத்தந்தை பிரான்சிஸ். நம்பிக்கை உள்ளவர்கள்




*Amoris Laetitia 2016*

ஒருபோதும் ஏமாற்றமடைய மாட்டார்கள் என்பதற்கேற்ப திருத்தந்தையின் பதினொன்றாவது ஆண்டை நோக்கிய பயணத்தில் நாமும் நம்பிக்கையுடன் வாழ்வோம். திருத்தந்தைக்காகவும் அவரது உடல் நலன் மற்றும் பணிக்காகவும் சிறப்பாக இறைவேண்டல் செய்வோம். உயிர்த்த இறைவனின் சாயல் கொண்ட நம்பிக்கை நம் வாழ்வையும் செழிப்பாக் கட்டும்.

# 2 ஏப்ரல் 2023 தொடக்கம் திருப்பலிக்கான தற்காலிக கட்டுப்பாடுகள் நீக்கப்படுகின்றன

**நம் தந்தையாகிய கடவுளின், ஆண்ட வராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும் அமைதியும் உரித்தாகுக. (1கொரி 1:3)**

கடந்த 2020, மார்ச் மாத மையம் வரை திருப்பலியில் உடல் ரீதியாக கலந்து கொள்வதற்கான சுதந்திரம் இருந்தது. அச்சுதந்திரம் கோவிட்-19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்டது. ஆலயங்களில் நற்கருணையை ஒரு சமூகமாக் கொண்டாடுதல் என்பது நமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களுக்காக தடைசெய்யப் பட்டது. ஆனாலும் தடை உத்தரவு களைக் கடைப்பிடித்து, வீட்டிலும் டிஜிட்டல் உலகத்திலும் கடவுளின் வார்த்தையைக் கேட்பதற்கான வழிகளை ஏற்று தனிநபர் மற்றும் குடும்ப இறைவேண்டல்களில் ஒன்று பட்டோம்.

நமது உடல் நலத்திற்கு ஏற்படும் ஆபத்துகள் காரணமாக, திருஅவை சட்டம் (CIC) 87/1-ன் படி மறைமாவட்ட ஆயர் விசுவாசிகளின் வழக்கமான திருவழிபாட்டு ஒழுங்கு முறையிலிருந்து விலக்கு அளிக்க அனுமதிக்கிறது. இச்சட்டத்தின் அடிப் படையில் நாங்கள் ஞாயிற்றுக் கிழமைகளிலும் புனித நாள்களிலும் திருப்பலியில் கலந்துகொள்வதற்கான கடமையிலிருந்து விலக்கு அளித்தோம்.

உடல் நலம், பாதுகாப்பு மற்றும் அனைவருக்குமான பொது நன்மை குறித்து 'விலக்கல்' என்பது எப்பொழுதும் ஒரு தற்காலிக நடவடிக்கையாகும். எனவே, கலந்தா லோசித்து அறிந்துணர்ந்த பிறகு, பெரும்பாலான தொற்றுநோய் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டிருப்பதைக் கண்டு, எதிர்வரும் 2 ஏப்ரல் 2023, குருத்து ஞாயிறு முதல் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட பொது தடைகள் நீக்கப்படுகின்றன.

திருஅவை சட்டம் 1246/1-ல் உள்ள படி, திருத்தூதர் மரபின்படி, பாஸ்கா மறைபொருள் கொண்டாடப்படும் ஞாயிறை அனைத்துலகத் திருஅவை யின் முதன்மையான கடன் திருநாளா கக் கடைப்படிக்க வேண்டும்.

திருஅவையின் சட்டத்தில் வழங்கப் பட்டுள்ளபடி, ஞாயிறு மற்றும் புனித நாள்கள் போன்ற கடன் திருநாள்களில் கடுமையான நோயின் காரணமாக (எடுத்துக்காட்டாக, இதய நோய், நீண்ட கால நுரையீரல் நோய்கள், சிறுநீரக நோய், நோயெதிர்ப்பு குறைபாடு மற்றும் கொரோனா வைரஸால் பாதிப்பு ) விலக்கு அளிக்கப்படுகிறது. ஆனாலும் இத்தகையோர் மேலும் புனிதமாக இருக்க, வேறு வழிகளில், உதாரணமாக, "தகுந்த நேரத்தை இறைவேண்டலில் செலவிடுதல், தனிப்பட்ட முறையில் அல்லது குடும்பமாக" (திருஅவை சட்டம் 1248 §2 இயங்கலை வாயிலாக திருப்பலியில் பங்கேற்க வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடன் திருநாள்களிலும் இறைமக்கள் அனை வரும் திருப்பலியில் பங்குகெடுக்க வேண்டும் (கத்தோலிக்க மறைக்கல்வி நூல் எண்2180, திருஅவை சட்டம் 1247) என்பதால் உங்கள் அனை வரையும் திருப்பலிக்கு அன்போடு அழைக்கிறோம்.

பேராயர் ஜூலியன் லியாவ்
*தலைவர், மலேசிய கத்தோலிக்கத் திருஅவை ஆயர்கள் பேரவை*
பேராயர், கோலாலம்பூர் மாமறைமாவட்டம்

மேதகு செபஸ்தியன் பிரான்சிஸ்
ஆயர், பினாங்கு மறைமாவட்டம்

மேதகு பெர்னர்ட் போல்
ஆயர், மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டம்.

மேதகு ஜோன் வோங்
பேராயர், கோத்தா கினபாலு மாமறைமாவட்டம்

மேதகு கொர்ன்லியுஸ் பியோங்
ஆயர், கெனிங்காவ் மறைமாவட்டம்

மேதகு ஜூலியுஸ் கில்டன்
ஆயர், சண்டக்கான் மறைமாவட்டம்

மேதகு சைமன் போ
பேராயர், கூச்சிங் மாமறைமாவட்டம்

மேதகு ரிச்சர்ட் இங்
ஆயர், மிரி மாறைமாவட்டம்

மேதகு ஜோசப் ஹீ
ஆயர், சிபு மறைமாவட்டம்

# கிள்ளானில் திருவழிபாட்டு உருவாக்கப் பயிற்சி நடைபெற்றது

**கிள்ளான்:** கடந்த மார்ச் 11-ம் திகதி, சனிக்கிழமை, இங்குள்ள புனித லூர்து அன்னை பங்கில் திருவழிபாட்டு பணிக் குழுவினருக்கான சிறப்பு உருவாக்கப்பயிற்சி நடைபெற்றது. ஏற்குறைய 60 பேர் கலந்துகொண்ட இப்பயிற்சி காலை 8.30 மணிக்குத் தொடங்கி மதியம் 12.30 வரை நடைபெற்றது. இப்பயிற்சியை சகோ. ஆர். கே. சாமி அவர்கள் வழிநடத்தினார்.


*பயிற்சியில் பங்கேற்ற ஒரு பகுதியினர்*

கடந்த சில ஆண்டுகளாகத் தடைபட்டுப் போன இப்பயிற்சி திருவழிபாட்டு பணியாளர்களுக்கு மீண்டும் உற்சாகத்தையும், ஆர்வத்தையையும் அளிக்க வாய்ப்பாக அமைந்தது. குறிப்பாக 2-ம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின் ஏற்பட்டட்டுள்ள மறுமலர்ச் சியை மையமாகக் கொணடும் இப்பயிற்சியை அவர் வழிநடத்தினார். நமது திருவழிபாட்டில் இயேசுவே மையம் என்பதும், அருள்பணி யாளர் அல்லது ஆயர் ஆகியோரின் அவசியமும், இறைமக்களின் முழு பங்கேற்பின் அவசியத்தையும் அவர் தெளிவுப்படுத்தினார்.

தொடர்ந்து, இறைவார்த்தை அறிக்கையிடு வோரின் பண்புகள், தயாரிப்பு, அறிக்கையிடும் நுட்பங்கள், நடைமுறை போன்றவற்றையும் விளக்கியது பழைய, புதிய பணியாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

நிறைவாக, திருவழிபாடு பற்றிய அடிப்படை கேள்விகளுக்கு அவர் பதிலளித்து பயிற்சியை முடித்தார். ஏற்பாட்டு பணிக்குழுவினர் சகோ. ஆர்.கே.சாமி அவர்களுக்கும் பயிற்சி ஏற்பாட்டுக்கு ஆதரவு நல்கிய பங்குத் தந்தை கிரகோரி சான் மற்றும் துணை பங்குத்தந்தை பெர்டிணன் மகிமை ஆகியோருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

*-மதில்டா ரோபர்ட்*

# 2023 திருத்தைல திருப்பலி கொண்டாட்டம்

திருவழிபாட்டு அறிவுரைப்படி ஆண்டுதோறும் இந்த திருத்தைலத் திருப்பலி நிகழ்வு பெரிய வியாழன் அன்றுதான் நடைபெறும். அன்றுதான் ஆண்டவர் இயேசு குருத்துவத்தையும் ஏற்படுத்தினார். ஆனால், இக்காலத்தில் தலத்திருஅவையின் தேவை கருதி ஆயர்கள் கடந்த சில ஆண்டுகளாக, இதை ஏற்புடைய மற்றொரு நாளில் கொண்டாட முடிவெடுத்தனர். இக்கொண்டாட்டத்தின் போது ஆயர் முன்னிலையில் அருள்பணியாளர்கள் அருள்பணி வாக்குறுதிகளையும் புதுப்பித்துக்கொள்வர். ஆயர் ஆசீர்வதிக்கும் மூன்று வகை திருத்தைலங்கள்:



1.ஆயத்தக் கிறிஸ்தவர்களுக்கான எண்ணெய்
2. கிறிஸம் எண்ணெய்
3. நோயாளிகளுக்கான எண்ணெய்

தீபகற்ப மலேசியாவில் கடந்த வாரம் மார்ச் 14, அன்று கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் மேற்கண்ட கொண்டாட்டம் கிள்ளான், தூய மீட்பர் பங்கில் நிறைவேற்றப்பட்டது. அடுத்து, வரும் 28 மார்ச் அன்று, பினாங்கு மறைமாவட்டத்தில், புக்கிட் மெர்தாஜாம், மைனர் பெசிலிக்காவிலும், எதிர்வரும் 4, ஏப்ரல் அன்று மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தில், மலாக்கா புனித பிரான்சிஸ் சேவியர் பங்கிலும் கொண்டாடப்படவுள்ளது.

# அவரில் உயிர்த்தெழ பாவத்தில் மடிவோம்!

தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறான இன்று நாம் வாசிக்கக்கேட்கும் இறைவார்த்தை, உயிர்த்தெழுதலும் வாழ்வுமான இயேசுவின் மீது நம்பிக்கை வைத்து வாழும் ஒருவர் இறப்பினும் வாழ்வார் என்ற சிந்தனையைத் தருகின்றது. "அவர் இறந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோ மெனில், அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த் தெழுவோம்" (உரோ 6:4-5). உலக முடிவிலே "நல்லன செய்தோர் வாழ்வு பெற உயிர்த்தெழுவர்; தீயென செய்தோர் தண்டனைத் தீர்ப்பு பெற உயிர்த்தெழு வர்" (யோவா 5:29)

நற்செய்தியில் இயேசுவிடம், பெத்தானி யாவைச் சார்ந்த அவருடைய நெருங்கிய நண்பரான இலாசர் நோயுற்றிருந்த செய்தி சொல்லப்படுகின்றது. இயேசுவிடம் இச்செய்தி சொல்லப்பட்டபொழுது அவர் தன்னுடைய சீடர்களோடு யோர்தான் ஆற்றின் மறுகரையில் இருந்தார். செய்தி யைக் கேள்விப்பட்டதும், உடனடியாக அவர் பெத்தானியாவிற்குச் சென்றுவிட வில்லை; இரண்டு நாள்கள் கழித்தே அங்கு செல்கின்றார். தன் நண்பர் இலாசரை உயிர்த்தெழச் செய்கின்றார்.

பொதுவாக யோவான் நற்செய்தியில் இடம்பெறும் ஒவ்வொரு நிகழ்வும் அல்லது இயேசு செய்கின்ற ஒவ்வோர் அருளடையாளமும் ஒவ்வொரு செய்தியை எடுத்துச் சொல்லும். இயேசுவுக்கும் சமாரியப் பெண்ணுக்கும் இயேசுவுக்கும் இடையே நடக்கும் உரையாடல் (யோவா 4) இயேசு வாழ்வளிக்கும் தண்ணீரை அளிப்பவர் என்ற செய்தியையும், இயேசு பிறவிலேயே பார்வையற்றிருந்த ஒருவரை நலப்படுத்துகின்ற நிகழ்வு (யோவா 9) அவர் உலகின் ஒளி என்ற செய்தியையும் எடுத்துச் சொல்லும். இன்றைய நற்செய் தியில் இயேசு இலாசரை உயிர்த்தெழச் செய்யும் நிகழ்வு, அவர் உயிர்த்தெழுதலும் வாழ்வுமாகவும் இருக்கின்றார் என்ற செய்தியை எடுத்துச் சொல்வதாக இருக் கின்றது.

இயேசு இலாசரை உயிர்த்தெழச் செய்யும் நிகழ்வு, இறைவாக்கினர் எசேக்கியேல் நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகத்தில் இடம்பெறுகின்ற, "இதோ நான் உங்கள் கல்லறைகளைத் திறக்கப் போகிறேன். உங்களை உங்கள் கல்லறைகளில் இருந்து மேலே கொண்டு வருவேன்" என்ற இறைவார்த்தையை நினைவுபடுத்துவதாக இருக்கின்றது. ஆம், இயேசு உயிர்த்தெழுதலும் வாழ்வுமாக இருக்கின்றார். அதனால்தான் அவர் இலாசரை உயிர்த்தெழச் செய்தார்.

"மேலொரு வாழ்வு உண்டு என்று, எம் மேலெழும் துன்பத்தை மறக்கின்றோம்" என்கிறது பழைய கிறிஸ்தவப் பாட லொன்று. ஆம், கிறிஸ்தவர்களாகிய நாம் சாவைக் கண்டு பயப்படத் தேவையில்லை. ஏனென்றால், சாவுக்குப் பின்னும் வாழ்வு உண்டு என்பதை திருஅவையானது மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. மண்ணாக இருந்த மனிதன் மீது கடவுள் தன் ஆவியை ஊதி உயிர் கொடுத்தார். இறந்துபோன தன் மக்கள்மீது கல்லறையைத் திறந்து ஆவியைப் பொழிவேன். அவர்களும் உயிர்பெறுவார்கள் என்று ஆண்டவர் கூறுகிறார்.

இயேசுவின் மீது தூய ஆவி தங்கியிருந்ததால் அவர் உயிர்த்தெழுந்தார். அதே ஆவி நம்மிலும் தங்கியிருக்கின்ற பொழுது அவர் வழியாகவே நாமும் உயிர்த்தெழுவோம். உயிர்த்தெழுதலுக்குச் சான்று பகரும் பொருட்டு இறந்து போன லாசரைக் கல்லறையினின்று இயேசு மீண்டும் உயிர்பெற்று எழச்செய்தார்

அதே போன்று பொது நிலையினர் நாம் ஒவ்வொருவரும் ஆண்டவர் இயேசுவின் வாழ்விற்கும் உயிர்த்தெழுதலுக்கும் உலகில் சான்றாக நின்று, வாழும் கடவுளின் அடையாளமாகத் திகழ வேண்டும்.

*-த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா.*

### தவக்காலத்தின் 5-ஆம் ஞாயிறு

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | எசே 37: 12-14 |
| தி. பாடல் | 130: 1-2. 3-4. 5-6. 7b-8 |
| வாசகம்: | உரோ8: 8-11 |
| நற்செய்தி: | யோவான்: 11:1-45 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 1**